**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 26.03.2018—ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு சாதாரணக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் : 24.03.2018 இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

(1) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான பிரதி வாரம் செவ்வாய் கிழமை வாரச்சந்தையில் சுங்கம் வசூல் செய்யும் உரிம இனத்திற்கு 2018—2019—ஆம் ஆண்டிற்கு சுங்கம் வசூல் செய்யும் உரிமைக்கு 28.02.2018—ஆம் தேதியன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. பொது ஏலத்தில் மூன்று நபர்கள் கலந்து கொண்டனர். அதன் விவரம் கீழ்வருமாறு :

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | உச்ச கேள்வித் தொகை |
|---|---|---|
| 1 | திரு பி. மனோகரன்,<br>43பி, காட்டூர் ரோடு, இராசிபுரம் | ரூ. 7,54,000/— |
| 2 | கே. அருள்செல்வன், த/பெ. எம். குமாரசாமி,<br>50, ஆலாங்காடு, பட்டணம், இராசிபுரம்ஃ | ரூ. 7,54,500/— |
| 3 | திரு. கே. நடேசன், த/பெ குழந்தைவேல்,<br>15எ, தர்மகர்த்தா சந்து, கோனேரிபட்டி, இராசிபுரம் | ரூ. 7,55,000/— |

மேற்கண்ட ஏலத்தில் உச்சக்கேள்வி திரு கே. நடேசன் என்பவர் கோரியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** பிரதி வாரம் செவ்வாய் கிழமை வாரச்சந்தையில் சுங்கம் வசூல் செய்யும் உரிம இனத்திற்கு சுங்கம் வசூல் செய்யும் உரிமைக்கு ஏலத்தில் உச்சக்கேள்வியாக ரூ. 7,55,000/—என திரு கே. நடேசன் என்பவர் கோரியுள்ளார். இது சென்ற 2017—2018—ஆம் ஆண்டின் உரிமத் தொகை ரூ. 6,84,101/—யை விட கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரி தொகை ரூ. 6,52,500/—யை விட கூடுதலாகவும் உள்ளது. எனவே உச்சக்கேள்வி தொகையினை உறுதி செய்வது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

(அ2/2709/17)

**தீர்மானம் எண். 252**

அனுமதிக்கப்பட்டது

(2) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான தினசரி சந்தையில் சுங்கம் வசூல் செய்யும் உரிம இனத்திற்கு 2018—2019—ஆம் ஆண்டிற்கு சுங்கம் வசூல் செய்யும் உரிமைக்கு 20.03.2018—ஆம் தேதியன்று நடைபெற்ற பொது ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளது. அதன் விவரம் கீழ்வருமாறு :

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | உச்ச கேள்வித் தொகை |
|---|---|---|
| 1 | திரு. எ. அறிவழகன், த/பெ. அருணாசலம், கவலேத்துக்காடு, | ரூ. 15,00,000/— |

| | | |
|---|---|---|
| | ஆர். புதுப்பாளையம் | |
| 2 | திரு. ஆர். ராஜா, த/பெ. ஆர். இராமசாமி, மாதா கோவில் வீதி, ஆர். புதுப்பாளையம் | ரூ. 14,81,000/– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் உச்சக்கேள்வி திரு. எ. அறிவழகன் என்பவர் கோரியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** தினசரி சந்தையில் சுங்கம் வசூல் செய்யும் உரிம இனத்திற்கு சுங்கம் வசூல் செய்யும் உரிமைக்கு ஒப்பந்தப்புள்ளியில் உச்சக் கேள்வியாக ரூ. 15,00,000/– என திரு. எ. அறிவழகன் என்பவர் கொடுத்துள்ளார். இது சென்ற 2017–2018–ஆம் ஆண்டின் உரிமத் தொகை ரூ 14,78,453/–யை விட கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரி தொகை ரூ. 14,10,000/–யை விட கூடுதலாகவும் உள்ளது. எனவே உச்ச கேள்வி தொகையினை உறுதி செய்வது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

(அ2/2709/17)

**தீர்மானம் எண். 253**

அனுமதிக்கப்பட்டது

( 3 ) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான ஆடு வதை சாலையில் வசூல் செய்யும் உரிமை மற்றும் (ஸ்லாட்டர் ஹவுஸ்) தினசரி மார்க்கெட்டில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள 15 கசாப்புக் கடைகளில் கட்டணம் வசூல் செய்தல் இனத்திற்கு 2018–2019–ஆம் ஆண்டிற்கு வசூல் செய்யும் உரிமைக்கு 28.02.2018–ஆம் தேதியன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. பொது ஏலத்தில் இரண்டு நபர்கள் மட்டும் கலந்து கொண்டனர். அதன் விவரம் கீழ்வருமாறு :

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | உச்ச கேள்வித் தொகை |
|---|---|---|
| 1 | திருமதி எஸ். இராஜேஸ்வரி, க/பெ. சபரிநாதன், 26/1, 51 செம்மலைத் தெரு, இராசிபுரம் | ரூ. 2,04,500/– |
| 2 | திரு. கே. நடேசன், த/பெ குழந்தைவேல், 15எ, தர்மகர்த்தா சந்து, கோனேரிபட்டி, இராசிபுரம் | ரூ. 2,05,000/– |

மேற்கண்ட ஏலத்தில் உச்சக்கேள்வி திரு கே. நடேசன் என்பவர் கோரியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** ஆடு வதை சாலையில் வசூல் செய்யும் உரிமை மற்றும் (ஸ்லாட்டர் ஹவஸ்) தினசரி மார்க்கெட்டில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள 15 கசாப்புக் கடைகளில் கட்டணம் வசூல் செய்தல் உரிம இனத்திற்கு உச்சக் கேள்வியாக ரூ. 2,05,000/– என திரு. கே. நடேசன் என்பவர் கோரியுள்ளார். இது சென்ற 2017–2018–ஆம் ஆண்டின் உரிமத் தொகை ரூ 1,82,464/–யை விட கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரி தொகை ரூ. 1,74,000/–யை விட கூடுதலாகவும் உள்ளது. எனவே உச்ச கேள்வி தொகையினை உறுதி செய்வது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

(அ2/2709/17)

**தீர்மானம் எண். 254**

அனுமதிக்கப்பட்டது

( 4 ) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான தினசரி மார்க்கெட்டில் உள்ள கோழிக்கடைகள் மற்றும் மீன் கடைகள் மற்றும் நகர எல்லைக்குள் உள்ள கோழிக்கடை வைத்து வியாபாரம் செய்பவர்கள் வசம் கட்டணம் வசூல் செய்தல் இனத்திற்கு 2018–2019–ஆம் ஆண்டிற்கு வசூல் செய்யும் உரிமைக்கு 28.02.2018–ஆம் தேதியன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. பொது ஏலத்தில் இரண்டு நபர்கள் மட்டும் கலந்து கொண்டனர். அதன் விவரம் கீழ்வருமாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | உச்ச கேள்வித் தொகை |
|---|---|---|
| 1 | திரு. கே. நடேசன், த/பெ குழந்தைவேல்,<br>15எ, தர்மகர்த்தா சந்து, கோனேரிபட்டி, இராசிபுரம் | ரூ. 1,25,000/– |
| 2 | திரு பி. ரமேஷ் அமல்ராஜ்,<br>29, வி. நகர் ரோடு எண். 17, இராசிபுரம் | ரூ. 1,24,200/– |

மேற்கண்ட ஏலத்தில் உச்சக்கேள்வி திரு கே. நடேசன் என்பவர் கோரியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** தினசரி மார்க்கெட்டில் உள்ள கோழிக்கடைகள் மற்றும் மீன் கடைகள் மற்றும் நகர எல்லைக்குள் உள்ள கோழிக்கடை வைத்து வியாபாரம் செய்பவர்கள் வசம் கட்டணம் வசூல் செய்தல் உரிம இனத்திற்கு உச்சக்கேள்வியாக ரூ. 1,25,000/– என திரு. கே. நடேசன் என்பவர் கோரியுள்ளார். இது சென்ற 2017–2018–ஆம் ஆண்டின் உரிமத் தொகை ரூ 1,10,801/–யை விட கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரி தொகை ரூ. 1,07,500/–யை விட கூடுதலாகவும் உள்ளது. எனவே உச்ச கேள்வி தொகையினை உறுதி செய்வது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

(அ2/2709/17)

**தீர்மானம் எண். 255**

அனுமதிக்கப்பட்டது

( 5 ) இராசிபுரம் கச்சேரி தெரு, சின்ன அக்ரஹாரம், பட்டணம் சாலை, திருவள்ளுவர் சாலை, அண்ணா சாலை மற்றும் நகர எல்லைக்குள் உள்ள தெருக்களில் வண்டிகள் மூலம் பழம், பல்பொருள் விற்பனை செய்வோரிடமிருந்து சுங்கம் வசூல் செய்யும் உரிமைக்கு 15.03.2018–ஆம் தேதியன்று நடைபெற்ற பொது ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளது. அதன் விவரம் கீழ்வருமாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | உச்ச கேள்வித் தொகை |
|---|---|---|
| 1 | திரு கே. சுப்ரமணி, த/பெ. கருப்பண்ணன்,<br>4, நடுத்தெரு, இராசிபுரம் | ரூ. 8,92,000/– |
| 2 | திரு கே. பெரியதம்பி, த/பெ. முத்துக்கவுண்டர்,<br>26, காட்டூர் காட்டுக்கொட்டாய், இராசிபுரம் | ரூ. 8,50,000/– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் உச்சக்கேள்வி திரு கே. சுப்ரமணி என்பவர் கோரியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** இராசிபுரம் கச்சேரி தெரு, சின்ன அக்ரஹாரம், பட்டணம் சாலை, திருவள்ளுவர் சாலை, அண்ணா சாலை மற்றும் நகர எல்லைக்குள் உள்ள தெருக்களில் வண்டிகள் மூலம் பழம், பல்பொருள் விற்பனை செய்வோரிடமிருந்து சுங்கம் வசூல் செய்யும்

ஒப்பந்தப்புள்ளியில் உச்சக் கேள்வியாக ரூ. 8,92,000/—என திரு கே. சுப்ரமணி என்பவர் கொடுத்துள்ளார். இது சென்ற 2017—2018—ஆம் ஆண்டின் உரிமத் தொகை ரூ. 5,29,751/—யை விட கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரி தொகை ரூ. 5,05,000/—யை விட கூடுதலாகவும் உள்ளது. எனவே உச்சக்கேள்வி தொகையினை உறுதி செய்வது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

(அ2/2709/17)

**தீர்மானம் எண். 256**

அனுமதிக்கப்பட்டது

( 6 ) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான புதிய பேருந்து நிலையத்திலுள்ள கட்டண கழிப்பிடம் வசூல் செய்யும் உரிமைக்கு 15.03.2018—ஆம் தேதியன்று நடைபெற்ற பொது ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளது. அதன் விவரம் கீழ்வருமாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரா் பெயர் மற்றும் முகவரி | உச்ச கேள்வித் தொகை |
|---|---|---|
| 1 | திரு கே. நடராஜ், த/பெ. குப்புசாமி,<br>30, செம்மலைத் தெரு, இராசிபுரம் | ரூ. 8,65,000/— |
| 2 | திருமதி எஸ். இராஜேஸ்வரி, க/பெ. சபரிநாதன்,<br>26/1, 51 செம்மலைத் தெரு, இராசிபுரம் | ரூ. 8,50,000/— |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் உச்சக்கேள்வி திரு கே. நடராஜ் என்பவர் கோரியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான புதிய பேருந்து நிலையத்திலுள்ள கட்டண கழிப்பிடம் வசூல் செய்யும் உரிமைக்கு ஒப்பந்தப்புள்ளியில் உச்ச கேள்வியாக ரூ. 8,65,000/— என திரு கே. நடராஜ் என்பவர் கொடுத்துள்ளார். இது சென்ற 2017—2018—ஆம் ஆண்டின் உரிமத் தொகை ரூ. 7,72,301/— யை விட கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரி தொகை ரூ. 7,36,110/—யை விட கூடுதலாகவும் உள்ளது. எனவே உச்சக்கேள்வி தொகையினை உறுதி செய்வது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

(அ2/2709/17)

**தீர்மானம் எண். 257**

அனுமதிக்கப்பட்டது

( 7 ) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான தினசரி மார்க்கெட்டில் உள்ள கட்டணக் கழிப்பிடம் வசூல் செய்யும் உரிமைக்கு 20.03.2018—ஆம் தேதியன்று நடைபெற்ற பொது ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளது. அதன் விவரம் கீழ்வருமாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரா் பெயர் மற்றும் முகவரி | உச்ச கேள்வித் தொகை |
|---|---|---|
| 1 | திரு ஒ. குணராஜ், த/பெ ஒபுளிசாமி,<br>5பி, சந்து வீரி தெரு, இராசிபுரம் | ரூ. 1,77,000/— |
| 2 | திரு கே. தினேஷ், த/பெ. கணேசன்,<br>வி. நகர் ரோடு எண். 5, இராசிபுரம் | ரூ. 1,76,500/— |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் உச்சக்கேள்வி திரு ஓ. குணராஜ் என்பவர் கோரியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான தினசரி மார்க்கெட்டில் உள்ள கட்டணக் கழிப்பிடம் வசூல் செய்யும் உரிமைக்கு ஒப்பந்தப்புள்ளியில் உச்ச கேள்வியாக ரூ. 1,77,000/—என திரு ஓ. குணராஜ் என்பவர் கொடுத்துள்ளார். இது சென்ற 2017—2018—ஆம் ஆண்டின் உரிமத் தொகை ரூ 1,44,428/—யை விட கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரி தொகை ரூ. 1,38,000/—யை விட கூடுதலாகவும் உள்ளது. எனவே உச்சக்கேள்வி தொகையினை மன்றம் உறுதி செய்யலாம்.

(அ2/2709/17)

**தீர்மானம் எண். 258**

அனுமதிக்கப்பட்டது

( 8 ) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் உள்ள பொருட்கள் பாதுகாக்கும் அறையில் கட்டணம் வசூலித்தல் உரிமைக்கு 15.03.2018—ஆம் தேதியன்று நடைபெற்ற பொது ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளது. அதன் விவரம் கீழ்வருமாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | உச்ச கேள்வித் தொகை |
|---|---|---|
| 1 | திரு நல்வினை விஸ்வராஜ், த/பெ . நல். வினைத்தான்,<br>12, காமராஜ் நகர், இராசிபுரம் | ரூ. 71,151/— |
| 2 | திரு பி. ரமேஷ் அமல்ராஜ்,<br>29, வி. நகர் ரோடு எண். 17, இராசிபுரம் | ரூ. 65,000/— |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் உச்ச கேள்வி திரு. நல்வினை விஸ்வராஜ் என்பவர் கோரியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் உள்ள பொருட்கள் பாதுகாக்கும் அறையில் கட்டணம் வசூலித்தல் உரிமைக்கு ஒப்பந்தப்புள்ளியில் உச்சக்கேள்வியாக ரூ. 71,151/— என திரு நல்வினை விஸ்வராஜ் என்பவர் கொடுத்துள்ளார். இது சென்ற 2017—2018—ஆம் ஆண்டின் உரிமத் தொகை ரூ. 61,740/—யை விட கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரி தொகை ரூ. 59,000/—யை விட கூடுதலாகவும் உள்ளது. எனவே உச்சக் கேள்வி தொகையினை உறுதி செய்வது சம்மந்தமாக மன்றம் முடிவு செய்யலாம்.

(அ2/2709/17)

**தீர்மானம் எண். 259**

அனுமதிக்கப்பட்டது

( 9 ) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் பேருந்துகளில் மட்டும் தட்டில் முறுக்கு விற்பனை செய்து கொள்ளும் உரிமைக்கு 28.02.2018—ஆம் தேதியன்று நடைபெற்ற பொது ஏலத்தில் இரண்டு நபர்களும், ஒப்பந்தப்புள்ளியில் ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளது. அதன் விவரம் கீழ்வருமாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | உச்ச கேள்வித் தொகை |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1 | திரு வெங்கடாசலம்,<br>26/96, கோ.பட்டி எக்ஸ்.நெ.2, இராசிபுரம் | ரூ. 2,90,000/– |
| 2 | திரு எ. மதியழகன், த/பெ. ஆறுமுகம்,<br>ஆர். பட்டணம், இராசிபுரம் | ரூ. 2,85,000/– |
| 3 | திரு கே. நடராஜ், த/பெ. குப்புசாமி,<br>30, செம்மலைத் தெரு, இராசிபுரம் | ரூ. 2,35,000/– |

மேற்கண்ட ஏலக் கேள்வியில் உச்சக்கேள்வி திரு வெங்கடாசலம் என்பவர் கோரியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் பேருந்துகளில் மட்டும் தட்டில் முறுக்கு விற்பனை செய்து கொள்ளும் உரிமைக்கு ஒப்பந்தப்புள்ளியில் உச்சக்கேள்வியாக ரூ. 2,90,000/– என வெங்கடாசலம் என்பவர் கோரியுள்ளார். இது சென்ற 2017–2018–ஆம் ஆண்டின் உரிமத் தொகை ரூ. 2,21,051/–யை விட கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரி தொகை ரூ. 2,11,000/–யை விட கூடுதலாகவும் உள்ளது. எனவே உச்ச கேள்வி தொகையினை ஏற்பது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

(அ2/2709/17)

**தீர்மானம் எண். 260**

அனுமதிக்கப்பட்டது

**(10)** இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் உள்ள சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள் நிறுத்துமிடம் கட்டணம் வசூல் செய்து உரிமைக்கு 28.02.2018–ஆம் தேதியன்று நடைபெற்ற பொது ஏலத்தில் இரண்டு நபர்களும், ஒப்பந்தப்புள்ளியில் ஒரு ஒப்பந்தப்புள்ளியும் வரப்பெற்றுள்ளது. அதன் விவரம் கீழ்வருமாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | உச்ச கேள்வித் தொகை |
|---|---|---|
| 1 | திரு எ. மதியழகன், த/பெ. ஆறுமுகம்,<br>ஆர். பட்டணம், இராசிபுரம் | ரூ. 8,52,200/– |
| 2 | திரு வெங்கடாசலம்,<br>26/96, கோ.பட்டி எக்ஸ்.நெ.2, இராசிபுரம் | ரூ. 8,52,100/– |
| 3 | திரு கே. நடராஜ், த/பெ. குப்புசாமி,<br>30, செம்மலைத் தெரு, இராசிபுரம் | ரூ. 7,96,000/– |

மேற்கண்ட ஏலக் கேள்வியில் உச்சக்கேள்வி திரு எ. மதியழகன் என்பவர் கோரியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் உள்ள சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள் நிறுத்துமிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமைக்கு ஒப்பந்தப்புள்ளியில் உச்சக்கேள்வியாக ரூ. 8,52,200/– என திரு எ. மதியழகன் என்பவர் கொடுத்துள்ளார். இது சென்ற 2017–2018–ஆம் ஆண்டின் உரிமத் தொகை ரூ. 7,72,301/–யை விட கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரி தொகை ரூ. 7,36,500/–யை விட கூடுதலாகவும் உள்ளது. எனவே உச்ச கேள்வி தொகையினை உறுதி செய்வது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

(அ2/2709/17)

**தீர்மானம் எண். 261**

அனுமதிக்கப்பட்டது

( 11 ) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான பழைய பேருந்து நிலையத்திலுள்ள கட்டண கழிப்பிடம் வசூல் செய்யும் உரிமைக்கு 20.03.2018–ஆம் தேதியன்று நடைபெற்ற பொது ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளது. அதன் விவரம் கீழ்வருமாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | உச்ச கேள்வித் தொகை |
|---|---|---|
| 1 | திரு எம். சக்தி,<br>36எ, மேற்கு காலனி தெரு, இராசிபுரம் | ரூ. 1,17,000/– |
| 2 | திரு பி. ரமேஷ் அமல்ராஜ்,<br>29, வி. நகர் ரோடு எண். 17, இராசிபுரம் | ரூ. 1,13,000/– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் உச்சக்கேள்வி திரு எம். சக்தி என்பவர் கோரியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான புதிய பேருந்து நிலையத்திலுள்ள கட்டண கழிப்பிடம் வசூல் செய்யும் உரிமைக்கு ஒப்பந்தப்புள்ளியில் உச்ச கேள்வியாக ரூ. 1,17,000/– என திரு எம். சக்தி என்பவர் கொடுத்துள்ளார். இது சென்ற 2017–2018–ஆம் ஆண்டின் உரிமத் தொகை ரூ. 1,14,500/– யை விட கூடுதலாக உள்ளது. எனவே உச்சக்கேள்வி தொகையினை உறுதி செய்வது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

(அ2/2709/17)

**தீர்மானம் எண். 262**

அனுமதிக்கப்பட்டது

( 12 ) இராசிபுரம் நகராட்சி புதிய பேருந்து நிலையத்திலுள்ள ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்து கொள்ளும் உரிமைக்கு 28.02.2018–ஆம் தேதியன்று நடைபெற்ற பொது ஏலத்தில் ஒரு நபரும், ஒப்பந்தப்புள்ளியில் ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளது. அதன் விவரம் கீழ்வருமாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | உச்ச கேள்வித் தொகை |
|---|---|---|
| 1 | திரு பி. ரமேஷ் அமல்ராஜ்,<br>29, வி. நகர் ரோடு எண். 17, இராசிபுரம் | ரூ. 2,30,600/– |
| 2 | திரு எம். பழனிவேல், த/பெ. முத்துக்கவுண்டர்,<br>20எப், பாரதி நகர், சுவாமி சிவானந்தா சாலை, இராசிபுரம் | ரூ. 2,43,942/– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் உச்சக்கேள்வி திரு எம். பழனிவேல் என்பவர் கோரியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** இராசிபுரம் நகராட்சி புதிய பேருந்து நிலையத்திலுள்ள ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்து கொள்ளும் உரிமைக்கு ஒப்பந்தப்புள்ளியில் உச்ச கேள்வியாக ரூ. 2,43,942/– என திரு எம். பழனிவேல் என்பவர் கொடுத்துள்ளார். இது சென்ற 2017–2018–ஆம் ஆண்டின் உரிமத் தொகை ரூ. 2,09,515/– யை விட கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரி தொகை ரூ. 1,94,418/–யை விட கூடுதலாகவும் உள்ளது. எனவே உச்சக்கேள்வி தொகையினை உறுதி செய்வது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

(அ2/2709/17)

**தீர்மானம் எண். 263**

அனுமதிக்கப்பட்டது

( 13 ) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் DADA JD TN 28 AZ 0778 வாகனத்தை ஒட்டுவதற்கு இந்நகராட்சியில் JCB பயிற்சிப் பெற்ற ஒட்டுநர் இல்லாத காரணத்தினால் JCB வாகனத்தை நகராட்சி உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை சமன் செய்வதற்கு தனியார் நிறுவனத்தின் மூலம் பயிற்சிப் பெற்ற ஒட்டுநரை பணிக்கு அனுப்பும் பணிக்கு 2018–19–ஆம் ஆண்டிற்கு தனியார் மூலம் பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ. 200000/– (ரூபாய் இரண்டு லட்சம்) மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/151/18)

**தீர்மானம் எண். 264**

அனுமதிக்கப்பட்டது

( 14 ) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வரும் திருமதி எம். சரசு, க/பெ. மாறன் என்பவர் தனது குடும்ப சூழ்நிலைக் காரணமாகவும், திருச்செங்கோட்டில் தனியாக வசித்து வரும் தனது மகளை அருகிலிருந்து கவனித்துக் கொள்ள வேண்டிய நிலை உள்ளதால் தன்னை திருச்செங்கோடு நகராட்சியில் காலியாக உள்ள துப்புரவு பணியாளர் பணியிடத்திற்கு பணி மாறுதல் செய்ய வேண்டி விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார். மேற்படி துப்புரவு பணியாளரை திருச்செங்கோடு நகராட்சிக்கு பணி மாறுதல் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/489/18)

**தீர்மானம் எண். 265**

அனுமதிக்கப்பட்டது

( 15 ) இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் கீழ்கண்ட விவரப்படி சமுதாய கழிப்பிடங்கள், பொதுக் கழிப்பிடங்கள் மற்றும் பள்ளிக் கழிப்பிடங்கள் உள்ளது. அதன் விவரம் பின்வருமாறு.

**1) சமுதாய கழிப்பிடங்கள்**

| வ.எண். | வார்டு எண். | தெருப் பெயர் |
|---|---|---|
| 1 | 1 | குமாரசாமி தெரு |
| 2 | 6 | வடக்கு காலனி வீதி |
| 3 | 6 | கிருஷ்ணன் வீதி |
| 4 | 8 | பிற்பட்டோர் காலனி |
| 5 | 8 | இந்திரா காலனி |
| 6 | 9 | வி. நகர் ரோடு எண். 2 |
| 7 | 10 | வி. நகர் ரோடு எண். 17 |
| 8 | 11 | வி. நகர் ரோடு எண். 10 |
| 9 | 21 | செட்டியண்ணன் தெரு |
| 10 | 25 | காலனி வீதி |
| 11 | 25 | காட்டூர் ரோடு |

**2) பொதுக் கழிப்பிடங்கள்**

| **வ.எண்.** | **வார்டு எண்.** | **தெருப் பெயர்** |
|---|---|---|
| 1 | 4 | பட்டணம் ரோடு |

**3) பள்ளிக் கழிப்பிடங்கள்**

| | |
|---|---|
| 1) | நகராட்சி நடுநிலைப் பள்ளி, பாரதிதாசன் சாலை |
| 2) | நகராட்சி நடுநிலைப் பள்ளி, காட்டூர் ரோடு |
| 3) | நகராட்சி நடுநிலைப் பள்ளி, ரங்கப்பன் தெரு |
| 4) | நகராட்சி நடுநிலைப் பள்ளி, சுப்பராய தெரு |
| 5) | நகராட்சி துவக்கப் பள்ளி, அண்ணாசாலை |
| 6) | நகராட்சி துவக்கப் பள்ளி, பாச்சி தெரு |
| 7) | நகராட்சி நடுநிலைப் பள்ளி, TVS ரோடு |
| 8) | அரசு மேல்நிலைப் பள்ளி, அண்ணாசாலை |

மேற்கண்ட கழிப்பிடங்களை தனியார் சேவை அமைப்புகள் மூலம் பொது மக்களிடம் கட்டணம் ஏதும் வசூலிக்காமல் இலவசமாக சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரிக்கவும் இதற்கான சேவை கட்டணம் ஒரு கழிப்பிடத்திற்கு `. 5000/– வீதம் ஒப்பந்ததாரருக்கு வழங்க ஆகும் உத்தேச செலவினம் `. 12.00 இலட்சத்திற்கு (ரூபாய் பன்னிரெண்டு லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பள்ளி கழிப்பிடம் – 8–ற்கு கல்வி நிதியிலிருந்து தொகை வழங்கலாம்.
3. சமுதாயக் கழிப்பிடத்திற்கும், பொதுக் கழிப்பிடத்திற்கும் தொகை வருவாய் நிதியிலிருந்து வழங்கலாம்.

(எச்1/535/18)

**தீர்மானம் எண். 266**

அனுமதிக்கப்பட்டது

(16) அரசாணை எண். 360 குடும்ப நல்வாழ்வுத் துறை, நாள் 12.10.2017–இன்படி பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழுக்கான கட்டணங்களை திருத்தி நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இராசிபுரம் நகராட்சியில் வழங்கப்படும் பிறப்பு இறப்பு சான்றுக்கான கட்டணங்களை பின்வருமாறு திருத்தி நிர்ணயம் செய்யப்படுகிறது.

| **வ. எண்** | **விதி எண்** | **விவரம்** | **தற்போது வசூலிக்கப்படும் கட்டணம் `.** | **திருத்தி நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணம் `.** |
|---|---|---|---|---|
| 1 | 9(1) | கால தாமத பதிவு 21 தினங்களுக்கு மேல் 30 தினங்களுக்குள் | 2/– | 100/– |
| 2 | 9(2) | கால தாமத பதிவுக் கட்டணம் ஒரு ஆண்டிற்குள் | 5/– | 200/– |
| 3 | 9(3) | கால தாமத பதிவுக் கட்டணம் ஒரு ஆண்டிற்கு மேல் | 10/– | 500/– |
| 4 | 10(1) (a) | குழந்தை பெயர் பதிவு ஒரு ஆண்டிற்கு மேல் | 5/– | 200/– |
| 5 | 10(1) (b) | குழந்தை பெயர் பதிவுக் கட்டணம் ஒரு ஆண்டிற்கு மேல் | 5/– | 200/– |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | 13(1) (a) | பிறப்பு–இறப்பு சான்று மற்றும் பதிவில்லா சான்று பெற கூடுதல் கட்டணம் ஒரு ஆண்டிற்கு | 5/– | 100/– |
| 7 | 13(1) (b) | கூடுதலாக ஒவ்வொரு ஆண்டிற்கும் தேடுதல் கட்டணம் | 5/– | 100/– |
| 8 | 13(1) (c) | பிறப்பு–இறப்பு சான்று வழங்க (முதல் நகல்) | 5/– | 200/– |
| 9 | 13(1) (d) | கூடுதலாக ஒவ்வொரு நகலுக்கும் கட்டணம் | – | 200/– |
| 10 | 13(1) (e) | பதிவில்லா சான்று வழங்க | 2/– | 100/– |

மேற்கண்டவாறு திருத்திய கட்டணம் வசூல் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/518/18)

**தீர்மானம் எண். 267**

அனுமதிக்கப்பட்டது

( 17 ) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளிலுள்ள நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான சாலைகளை இருபுறமும் அகலப்படுத்துவதால், அண்ணாசாலை ஆழ்துளைக் கிணற்றிலிருந்து சேந்தமங்கலம் பிரிவு சாலை வரையுள்ள தண்ணீர் குழாய்களை மாற்றி அமைக்கவும், ஆழ்துளைக் கிணற்றை பாதுகாப்பாக மூடி செய்து அமைக்கவும், தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 1,25,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** தண்ணீர் விநியோக அவசியம் கருதி குடிநீர் குழாய் மாற்றியமைக்க ஆகும் செலவினம் ரூ. 125000/–க்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/401/18)

**தீர்மானம் எண். 268**

அனுமதிக்கப்பட்டது

( 18 ) இராசிபுரம் நகராட்சி ஈப்பு எண். ட்டி என் 28 க்யூ 8402 வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்ய வாகன விநியோக நிறுவனமான எஸ்கேஎஸ் மகேந்திரா, நாமக்கல் பணிமனையில் சரிசெய்யவும், அதற்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** எதிர்வரும் கோடை காலத்தில் குடிநீர் தொடர்பான பணிகளை மேற்கொள்ள ஏதுவாக ஈப்பு எண். ட்டி என் 28 க்யூ 8402 பழுதுகளை நீக்கம் செய்யவும், நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

(இ2/453/18)

**தீர்மானம் எண். 269**

அனுமதிக்கப்பட்டது

( 19 ) இராசிபுரம் நகராட்சி அலுவலகப் பணியாளர்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க உரிய இயந்திரம் வாங்க உத்தேச செலவினம் ரூ. 35000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/538/18)

**தீர்மானம் எண். 270**

அனுமதிக்கப்பட்டது

( 20 ) இராசிபுரம் நகராட்சியின் 2017–18–ஆம் ஆண்டின் திருத்திய வரவு செலவு மற்றும் 2018–19–ஆம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவுத் திட்ட அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(பி1/405/18)

**தீர்மானம் எண். 271**

அனுமதிக்கப்பட்டது

(21) அரசாணை நிலை எண். 97 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள் 12.07.07 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது சுற்றறிக்கை எண். 748/08/குவ2 நாள் 21.9.09–இல் நகராட்சிகளில் குடிநீர் இணைப்பு வழங்கும்போது ஒவ்வொரு ஆண்டும் 5 சதவீதம் உயர்த்தி வசூலிக்க ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி 01.04.2018 முதல் உயர்த்தி வசூலிக்க நிர்ணயம் செய்யப்படும் கட்டண விவரங்கள் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | சாலை விவரம் | 1.4.17 முதல் வசூலிக்கப்படும் கட்டணம் | 1.4.18 முதல் வசூலிக்கப்பட வேண்டிய கட்டணம் |
|---|---|---|---|
| 1) | **கருங்கல் ஜல்லி சாலை** | ரூ. | ரூ. |
| | 0.30 மீட்டர் நீளத்திற்கு | 1554/– | 1635/– |
| | 30–90 மீட்டர் நீளத்திற்கு | 2520/– | 2650/– |
| 2) | **தார் சாலை** | | |
| | 0.30 மீட்டர் நீளத்திற்கு | 3329/– | 3500/– |
| | 30–90 மீட்டர் நீளத்திற்கு | 4221/– | 4435/– |
| 3) | **சிமெண்ட் சாலை** | | |
| | 0.30 மீட்டர் நீளத்திற்கு | 3843/– | 4040/– |
| | 30–90 மீட்டர் நீளத்திற்கு | 4736/– | 4980/– |

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

(இ2/481/18)

**தீர்மானம் எண். 272**

அனுமதிக்கப்பட்டது

(22) இராசிபுரம் நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் அவர்களின் தொலைபேசி இணைப்புகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் மூலம் பெறப்பட்ட இரண்டு தொலைபேசி இணைப்புகளுக்கு 2017–18–ஆம் ஆண்டிற்கு சந்தாத் தொகை செலுத்த ரூ. 20000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(அ5/550/18)

**தீர்மானம் எண். 273**

அனுமதிக்கப்பட்டது

(23) இராசிபுரம் நகராட்சி புதிய பேருந்து நிலையத்திற்குள் வரும் பேருந்துகளில் சுங்கம் வசூல் செய்யும் உரிமைக்கு 2018–19–ஆம் ஆண்டிற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்து கொள்ளவில்லை. ஆதலால் துறை மூலமாக வசூல் செய்ய ஏதுவாக பேருந்து 1–க்கு ரூ. 12/– வீதம் 1.4.2018 முதல் ரசீதுகள் அச்சடிக்க வேண்டியுள்ளது. ஒரு நாளைக்கு உத்தேசமாக 207 பேருந்துகளுக்கு வசூல் செய்ய இருப்பதால் 207 x 30 x 12 மாதங்களுக்கு 80000 ரசீதுகள் அச்சடிக்கவும் அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ. 25000/–க்கு மன்றப் பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(அ2/2709/17)

**தீர்மானம் எண். 274**

அனுமதிக்கப்பட்டது

(24) செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்களை பிரதிவாதியாக கொண்ட வழக்குகளை விரைந்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை ஆகியோர் அறிவுரை வழங்கியதன் அடிப்படையில் இந்நகராட்சியில் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்களை பிரதிவாதியாக கொண்டு கீழ்க்கண்ட வழக்குகள் தொடரப்பட்டுள்ளது.

1) நீதிப்பேராணை எண். 32529/2017 முதல் 32531/2017 முடிய – 3
2) நீதிப்பேராணை எண். 32624/2017 முதல் 32628/2017 முடிய – 5
3) நீதிப்பேராணை எண். 33489/2017 முதல் 33491/2017 முடிய – 3

மேற்கண்ட வழக்குகளை விரைவாக முடிக்க சென்னை உயர்நீதி மன்ற அட்வகேட் ஜெனரல் திரு விஜயநாராயன் அவர்களிடம் ஒப்படைக்கவும், வக்காலத்து தாக்கல் செய்யவும், வழக்கு கட்டணம் ரூ. 18000/–வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(சி1/2932/17)

**தீர்மானம் எண். 275**

அனுமதிக்கப்பட்டது

(25) இந்நகராட்சி பொதுப்பிரிவில் அலுவலக உபயோகத்திற்கு பயன்படுத்தப்பட்டு வரும் SHARP Printer cum copier இயந்திரம் மூலம் அலுவலகத்தில் தயார் செய்யப்படும் அறிக்கைகள், கடிதங்கள் ஆகியவை Printer மற்றும் Xerox எடுக்கப்பட்டு மாவட்ட ஆட்சியர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் கடித போக்குவரத்துகள் அதன் மூலம் நடைபெற்று வருகிறது. தற்போது மேற்படி Printer cum copier இயந்திரத்திற்குத் தேவையான Tonner இருப்பில் இல்லை. எனவே, அலுவலகப்பணி தடையின்றி நடைபெற ஏதுவாக மேற்படி இயந்திரத்திற்கு Tonner வாங்க வேண்டியது அவசியமாகிறது. எனவே, மேற்படி இயந்திரத்திற்கு தேவையான Tonner 2 எண்ணிக்கை உத்தேசமாக ரூ. 40000/– (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) செலவில் வாங்கிக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(பி3/637/18)

**தீர்மானம் எண். 276**

அனுமதிக்கப்பட்டது

(26) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் திருத்தம் செய்து பிரசுரம் செய்யப்பட்ட தமிழ்நாடு அரசிதழ் எண். 33 நாள் 25.01.2018–இன்படி விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து, கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் மீது சொத்துவரி விதிக்கப்பட வேண்டும் மற்றும் அரசின் உதவி பெற்று செயல்பட்டு வரும் நிறுவனங்கள் சுயநிதி படிப்புகளை நடத்தி வருமாயின் அக்கட்டிடங்கள் மீது சொத்துவரி விதிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இந்நகராட்சியில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83(1)(சி)–ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு சொத்து வரியிலிருந்து விலக்களிக்கவும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83(1)சி–ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் அனைத்திற்கும் சொத்துவரி விதிக்கவும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83(1)சி–ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி கல்வி பயன்பாட்டிற்காக அரசின் உதவி பெற்று நடத்தப்படும் நிறுவனங்கள் சுயநிதி படிப்புகளை நடத்தி வரும்பட்சத்தில் அந்நிறுவனங்களின் கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கவும், கல்வி பயன்பாட்டிற்கான அனைத்து கட்டிடங்கள் மற்றும் கல்வி பயன்பாட்டிற்கான அரசின் உதவி பெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் நிறுவனங்களின் கட்டிடங்கள் ஆகியவற்றின் மீது குடியிருப்பிற்கு விதிக்கப்படும் சொத்துவரி விகிதத்தில் 1.5 மடங்கு சொத்து வரியாக விதிக்கவும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83(1)சி–ற்கு திருத்தம் வெளியிடப்பட்டுள்ள காலமான 2017–2018 இரண்டாம் அரை ஆண்டிலிருந்து மேற்படி கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கவும், மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

மேலும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 78(3)–இன்படி ஆட்சேபணைகளை அளிப்பதற்காக ஒரு தமிழ் நாளிதழில் அறிவிப்பு வெளியிடுவதற்கும் மற்றும் அலுவலக அறிவிப்பு பலகையில் ஒட்டி அறிவிப்பு செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(அ1/543/18)

**தீர்மானம் எண். 277**

அனுமதிக்கப்பட்டது

(27) தூய்மை பாரத திட்டத்தின்கீழ் குடியிருப்பு பகுதிகளில் தனி நபர் கழிப்பிடம் கட்ட இராசிபுரம் நகராட்சி தேர்வு செய்யப்பட்டுள்ளது. அதன்படி தனி நபர் கழிப்பிடம் கட்ட ஒரு கழிப்பிடத்திற்கு மத்திய அரசு `. 4000/–, மாநில அரசு `. 2000/–, நகராட்சி `. 2000/– மான்யமாக பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் மேலும் 113 வீடுகளுக்கு தனி நபர் கழிப்பிடம் கட்ட கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| மத்திய அரசு ரூ. 4000/– x 113 | = | `.. 452000/- |
| மாநில அரசு ரூ. 2000/– x 113 | = | `. 226000/- |
| நகராட்சி ரூ. 2000/– x 113 | = | `. 226000/- |
| | | ------------------ |
| **மொத்தம்** | | **`. 904000/-** |

------------------

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

**2)** மத்திய அரசு மற்றும் மாநில அரசின் நிதி வரும் வரையில் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/677/18)

**தீர்மானம் எண். 278**

அனுமதிக்கப்பட்டது

ஒம் /– ப. கிருஷ்ணமூர்த்தி
தனி அலுவலர்

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.